நாள்: 18.03.2024
OP:50/2023
பெயர்: மதுசூதணன்
ம.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் இந்த விவாகரத்து மனு தாக்கல் செய்யப்பட்டது. மனுவில் தாக்கல் செய்துள்ள எதிருரை சங்கதிகளை படித்து பார்த்து தான் சாட்சியம் அளிக்கிறேன். 03.09.2017ல் எங்கள் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கு 3 மாதத்திற்கு முன்னர் நிச்சயதார்த்தம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்னர் நாங்கள் அலைபேசியில் பேசிக்கொண்டோம் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் எங்களுக்குள் ஒரு மகிழ்ச்சியான சூழ்நிலை இருந்தது என்றால் சரிதான். நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு தான் திருமண பந்தத்துக்குள் சென்றொம் என்றால் சரிதான். என் மனைவிக்கு 56 பவுனும், எனக்கு 6 பவுன் நகையும் என் மனைவி வீட்டில் கொடுத்தார்கள் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் என் மனைவி வீட்டில் கூடுதலாக 12 பவுன் நகை கொடுத்தார்கள். திருமணமான உடன் திருமண வாழ்க்கையை எங்களுடைய வீட்டில் தான் தொடங்கினோம் என்றால் சரிதான். திருமணம் முடிந்து இரண்டு மாதம் கழித்து கோயம்புத்தூரில் உள்ள எனது அரசு அலுவலக குடியிருப்புக்கு அழைத்துச் சென்றேன். திருமணம் முடிந்து ஒரு மாதம் காலம் என் மனைவியுடன் என் பெற்றோர் வீட்டில் தான் இருந்தேன். என் உடன் பிறந்தவர் அக்கா மட்டும். என் மனைவி திருமணம் முடிந்து 3 மாத காலம் தாம்பத்திய வாழ்க்கைக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. அந்த 3 மாத காலத்திற்கு பின்னர் எங்களுக்குள் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை இருந்ததா என்றால் அவ்வளவாக இல்லை. திருமணம் ஆன காலத்திலிருந்து நாங்கள் பிரியும் காலம் வரை எங்களுக்குள் குடும்ப வாழ்க்கை இல்லை என்பது தான் என்னுடைய வழக்கா என்றால் சில நேரங்களில் மட்டுமே தாம்பத்தியத்திற்கு ஒத்துக்கொள்வார். பெரும்பாலான நேரங்களில் தாம்பத்தியம் கிடையாது. மேற்படி விசயங்களை என் குடும்பத்தில் உள்ள அனைவரிடமும் நான் தெரிவித்துள்ளேன். அதேபோல் என் மனைவியின் பெற்றோருடைய கவனத்திற்கும் கொண்டு சென்றேன். திருமணத்திற்கு பின்பு எங்களுக்கு குழந்தை இல்லை என்பதற்கு மருத்துவரிடம் எப்போது சென்றோம் என்றால் திருமணம் ஆன 6 மாதம் கழித்து மதுரையில் உள்ள ராயல் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை அளித்தோம். அங்கு எனக்கும் மருத்துவ

பரிசோதனை செய்யப்பட்டது. அதற்கான ஆவணம் என் கைவசம் உள்ளது. மேற்படி சிகிச்சை எடுத்துக்கொண்ட விபரத்தை மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். ராயல் மருத்துவமனைக்கு என் மனைவியை மட்டும் அனுப்பிவிட்டு நான் மருத்துவமனைக்கு கூட உடன் செல்லவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் இருவரும் சேர்ந்து 15 முறைக்கு மேல் மருத்துவப் பரிசோதனைக்கு சென்றிருப்போம். மருத்துவ பரிசோதனையில் தொடர்ந்து சிகிச்சை எடுத்தால் குழந்தைப்பேறுக்கு வாய்ப்புள்ளது என்று மருத்துவர் கூறினார். ம.சா.ஆ.3, 4 ஆவணங்களைத்தவிர வேறு மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த மருத்துவமனையில் எப்போது சிகிச்சை எடுத்தேன் என்ற விபரத்தை மனுவில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். ம.சா.ஆ.3 ஆவணம் என் மனைவிக்கு பரிந்துரைத்த மருத்துவ கருத்துரை என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ஆவணம் எனக்கு எடுக்கப்பட்ட லேப் டெஸ்ட் ரிப்போர்ட் என்றால் சரிதான். அதில் மருத்துவர் என்ன பரிந்துரைத்தார் என்றால் ம.சா.ஆ.4 தான் மருத்துவர் பரிந்துரைத்தபடி தான் லேப் டெஸ்ட் எடுத்தேன். ம.சா.ஆ.3 ஆவணத்தை நிரூபணம் செய்ய அதை வழங்கிய மருத்தவரை விசாரணை செய்தால் தான் மருத்துவ காரணங்கள் தெரியும் என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆவணத்தில் எதிர்மனுதாரர் குழந்தைக்கு தகுதியற்றவர் என்ற விபரம் இல்லை என்றால் சரிதான். குழந்தைப்பேறு சிகிச்சைக்காக எதிர்மனுதாரரை மட்டும் நான் அனுப்பிவிட்டு நான் சிகிச்சைக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் சரியல்ல. நானும் எனது பெற்றோர்களும் என் மனைவியைப் பார்த்து குழந்தைப்பேறு பெறுவதற்கு தனுதியற்ற நபர் என மனஉளைச்சல் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. உண்மை விபரங்களை மறைத்து அவர்கள் மீது பழிசுமத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தாம்பத்திய வாழ்க்கைக்கு ஒத்துழைக்கவில்லை என்பதும், அவர் குழந்தைப்பேறு பெறுவதற்கு தனுதியற்ற நபர் என்பது தவறான சங்கதி என்றால் சரியல்ல. நாங்கள் கோம்புத்தூரில் குடியிருந்த காலகட்டத்தில் எதிர்மனுதாரர் அடிக்கடி வெளியே சென்றுவிடுவார் என்றும், அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் முன்னிலையில் அவமானம் அடைந்தேன் என்பதை எந்த தேதியில் மேற்படி சம்பவம் நடந்தது என்பதை மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் தேதி சொல்லவில்லை. ஆனால் அந்த சங்கதியை சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல் எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிர்மனுதாரர் மீது பழிசுமத்த வேண்டும் என்பதற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பகல்

நேரத்திலும் இரவு நேரத்திலும் 5 மணி நேரம் அலைபேசியில் பேசிக்கொண்டிருப்பார் என்று சொல்லியுள்ளேன் என்றால் ஒரு பெண்ணிடம் பேசிக்கொண்டிருப்பார் என சொல்லியுள்ளேன். அந்த பெண் யார் என்று தெரியவில்லை. மனுவில் பெண் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அவருடைய நன்மைக்காக குறிப்பிடவில்லை. எதிர்மனுதாரர் நன்மைக்காக என்ற விபரமும் மனுவில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இதுசம்மந்தமாக பெரியோர்கள் முன்னிலையில் அவர் அலைபேசியில் தொடர்ந்து பேசுவது 5 முறை பஞ்சாயத்து நடைபெற்றது. எதிர்மனுதாரர் பேசியது என்பது அவர் பெற்றோரிடமும் உறவினரிடமும் தான் என்பது தான் இம்மனுவின் சங்கதியாக குறிப்பிட்டுள்ளேன் என்றால்சரிதான். ஆனால் அவருடைய பெண் நண்பருடன் பேசுவார். எதிர்மனுதாரருக்கு எத்தனை பெண் நண்பர் உள்ளார் என்றால் ஒரே ஒரு பெண் நண்பர் உள்ளார். அந்த பெண்ணின் விபரத்தை மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபொல் எதிர்மனுதாரர் எந்த பெண்ணிடமும் அலைபேசியில் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதில்லை என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னர் கோயம்புத்தூா, திருச்சியில் நான் பணிநிமித்தமாக சென்றுள்ளேன். அப்பொழுது அங்கு நாங்கள் தனியாகத்தான் இருந்தோம். நான் பணிக்கு சென்ற காலத்தில் எதிர்மனுதாரர் மனைவி என்ற முறையில் எனக்கு பணிவிடைகளை செய்வார் என்றால் சரியல்ல. செய்ததே கிடையாது. நான் மதுரை கோட்டத்தில் தபால்துறையில் பயிற்சியாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஆரம்பத்தில் தபால்காரராகத்தான் முதல்நிலை பணியில் சேர்ந்தேன். அந்த கால கட்டத்தில் என்னுடைய மாத சம்பளம் ரூ.42,000-க்குள் தான் இருந்தது என்றால் முதலில் ரூ.32,000 இருந்தது. பணிஉயர்வு பெற்றது ரூ.49,000 சம்பளம் பெற்று வருகிறேன். பிடித்தம் போக மீதி ரூ.23,000 கையில் வாங்குவேன். எதிர்மனுதாரர் ஆடம்பரமான செலவு செய்யக்கோரி என்னை தொந்தரவு செய்வார் என நான் சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. நான் மட்டுமே தனிப்பட்ட முறையில் செலவு செய்துவிட்டு எதிர்மனுதாரரை உதாசீனப்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஆட்பரமான உடைகள், காலணிகள் வாங்குவதற்காக செலவு செய்தேன் என்பதற்காக ரசீதுகள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் வாங்கி கொடுத்தேன். என்னுடைய மாத சம்பளத்திற்கு ஏற்றபடிதான் என் மனைவி என்னுடன் வாழ்க்கை நடத்தினார் என்றும், நான் தான் தேவையில்லாத குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து பணிநிமித்தமாக செல்லும்போது எதிர்மனுதாரர் அவருடைய

நகைகளை என் பெற்றோரிடம் தான் ஒப்படைத்து சென்றார் என்றால் சரியல்ல. என் கைவசம் தான் இருந்தது. எதிர்மனுதாரர் 25 பவுன் நகைகளை என்னிடம் கொடுத்து அடமானம் வைத்து கடன் பெற்றுத் தரச்சொன்னார் என மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அடமானம்வைத்தேன். அதை கல்விக்காகவும் மருத்துவத்திற்காகவும் தான் அடகு வைத்தேன். மேற்படி சங்கதிகளை மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றும், நகைகைள் அனைத்தும் என் பெற்றோர்கள் கைவசம் உள்ளது என்ற நிலையில், அடமானம் வைக்கவேண்டிய சூழ்நிலை இல்லை என்றால் சரியல்ல. என் மனைவிக்கு இரண்டு விலை உயர்ந்து செல்போன்கள் வாங்கிக் கொடுத்துள்ளேன். அதனுடைய விலைகள் பற்றி மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் எதிர்மனுதாரரிடம் அவரது பெற்றோரிடம் சென்று கூடுதல் பணம் வாங்கி வர வற்புறுத்தினேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் எனது பெற்றோர்களை அவமானமாக பேசியுள்ளார் என்று அவர்மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். லோயர்கேம்ப் காவல்நிலையத்தில் ஆன்லைன் மூலம் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 08.02.2022ம் தேதி நடைபெற்ற சம்பவம் சம்மந்தமாக ஆன்லைனில் புகார் கொடுத்தேன். அந்த புகாரின்பேரில் எதிர்மனுதாரரையோ என் பெற்றோர்களையோ அழைத்து விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.6 புகார் தவிர்த்து வேறு எந்த புகாரும் எதிர்மனுதாரர் மீது கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது தவறு என்றும், ம.சா.ஆ.6 புகாரானது 08.02.2023 அன்று கொடுத்துள்ளேன் என்றும், அதன்பின்னர் குறுகிய காலத்திலேயே இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையமே செல்லாமல் ஆன்லைனில் புகார் கொடுத்துவிட்டு இந்த மனுவை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகாருக்கு என் மனைவியை அழைக்கவில்லை. என்னையும் என் பெற்றோர்களையும் தான் அழைத்தார்கள். அந்த விசாரணை எனக்கு திருப்தி இல்லை என்பதால் தான் நீதிமன்றத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தானாகவே காயங்கள் ஏற்படுத்தி விடுவார் என்று திருமாங்கல்யத்தை கழற்றி எரிந்துவிடுவார் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளேன். அது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. அவ்வாறு எந்தவொரு செயலும் செய்யவில்லை என்றும், மேற்படி பொய் சங்கதிகள் எதிர்மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்

மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் தன்னை காட்டிக்கொண்டுள்ளார் என மனுவில் குறிப்பிட்டுள்ளென். அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதைக் காட்ட மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மனநலம் பாதிக்கப்பட்டவர்போல் என் தான் மனுவில் குறிப்பிட்டுள்ளேன். மேலே சொன்னவாறு மனநலம் பாதிக்கப்பட்டவர்போல் என் மனைவி ஒருபோதும் நடந்தது கிடையாது என்றும், நான் மனுவிற்காக நடக்காததை நடந்தது போல் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மனைவி 3 முறை என்னிடம் சொல்லாமல் அவரது பெற்றோரை பார்க்க சென்று விட்டார். நான் விடுமுறைக்கு எனது பெற்றோர் வீட்டுக்கு வந்தபோது அங்கிருந்த அவரது பெற்றோர் வீட்டுக்கு சொல்லாமல் 3 முறை சென்றார். எனது வீட்டிற்கும் எனது மனைவியின் பெற்றோர் வீட்டிற்கும் 30 கிமீ. தூரம் இருக்கும். எந்தகால கட்டத்திலும் என் அனுமதியில்லாமல் என் மனைவி சென்றது கிடையாது என்றால் சரியல்ல. 2022 ஜூலை மாதம் நான் லால்குடியில் குடியிருப்பதற்காக சென்றேன். எனது மனு பத்தி 15-ல் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதி தீபாவளி பண்டியை முன்னிட்டு அவரது பெற்றோர் வீட்டுக்கு செல்வதாக சொல்லிவிட்டு சென்றவர் திரும்ப வரவில்லை என குறிப்பிட்டுள்ளேன். அந்த வருடம் தீபாவளி பண்டியை 24.10.2022ல் வரப்பெற்றது. அன்றைய தினம் என்னுடைய வீட்டில் தீபாவளி பண்டியை கொண்டாடி விட்டு அன்று மதியம் எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டுக்கு சென்றோம் என்றால் சரியல்ல. என் மனைவி என்னிடம் பிரச்சனை செய்ததால் அவரது பெற்றோர் வீட்டு வாசலில் இறக்கி விட்டு வந்துவிட்டேன். என் மனைவி பிரச்சனை ஏற்படுத்தியதால் இறக்கிவிட்டதாக மனுவில் சொல்லவில்லை. எந்த பிரச்சனையும் அன்றைய தினம் ஏற்படவில்லை என்றும், நான் தான் என் மனைவியை அவரது பெற்றோர் வீட்டுக்கு அனுப்பி விட்டு விட்டேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரை திரும்ப வீட்டுக்கு அழைக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் பலமுறை செல்போனில் அழைத்தும் அவர் சேர்ந்து வாழ வரவில்லை. நகையும் பணத்தையும் கொடுத்துவிடு எனக்கு வாழ பிடிக்கவில்லை என கூறினார். உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் நகையும் பணத்தையும் கொடுத்து விட்டேன். என் மனுவில் நான் ஊருக்கு செல்வதற்காக எதிர்மனுதாரரை அழைத்தபோது எதிர்மனுதாரர் எவ்வித காரணமும் சொல்லாமல் வரமறுத்துவிட்டார் என நான் மனுவில் சொல்லியுள்ளது சரியானது தான். நான் உண்மை விபரங்களை மறைத்து முன்னுக்குப் பின் முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் என் மனைவியை அவரது பெற்றோர் வீட்டில் விட்டுச்சென்ற பிறகு ஒருபோதும் சேர்ந்து வாழ அழைக்கவில்லை என்றால் சரியல்ல.

என் மனைவினை சேர்ந்து வாழக்கோரி எந்த புகாரும் கொடுக்கவில்லை, வழக்கறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை, சேர்ந்து வாழ மனுத்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 08.02.2023ல் ஊருக்கு வரும்பொது என் மனைவியும் அவரது பெற்றோரும் எனக்கு கொலைமிரட்டல் விடுத்தார் என மனுவில் சொல்லியுள்ளேன். மேற்படி காரணத்திற்காகத்தான் ஆன்லைனில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஆன்லைன் புகார் ஒரே ஒரு முறை தான் கொடுத்துள்ளேன். அதுவும் 08.02.2023ம் தேதி சம்பவத்திற்காகத்தான் கொடுத்துள்ளேன். உண்மையில் நான் சொல்வதுபோல் கொலைமிரட்டல் சம்பவம் நடந்திருந்தால் காவல்துறையினர் உரிய நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றும், நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் அந்த தேதியில் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது பெண் நண்பருடன் நெருங்கிய தன்பால் ஈர்ப்பின் காரணமாக அவரது தனிப்பட்ட வாழ்க்கை முக்கியம் என இருந்தார் என மனுவில் குறிப்பிட்டுள்ளேன். அதுகுறித்து எவ்விதமான குறிப்பிட்ட தகவல்கள் மனுவில் இல்லை என்றால் சரிதான். ஒரு பெண்ணின் வாழ்க்கைக்காக சொல்லவில்லை. பெண்ணின் வாழ்க்கைக்காக என்ற விபரத்தை மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி குற்றச்சாட்டு என் மனைவி மீது திட்டமிட்டு நான் குறிப்பிட்டுள்ள ஒரு அவதுாறான குற்றச்சாட்டு என்றால் சரியல்ல. என் மனைவிக்கு எந்தவொரு பெண்ணுடனும் தொடர்பு கிடையாது என்றும், அவர் செல்போனிலும் பேசியது கிடையாது என்றும், என் மனைவிக்கு மனஉளைச்சல் ஏற்படுத்துவதற்காக பொய்யான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மேற்படி ஆதாரமில்லாத குற்றச்சாட்டால் என் மனைவியும் அவரது பெற்றோரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவர்தாக்கல் செய்துள்ள எதிருரையில் என் மீது தனிப்பட்ட குற்றச்சாட்டையும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தவறான குற்றச்சாட்டுக்களை கூறி என்னுடைய முடிவுக்கு வந்துவிடுவார் என்ற காரணத்திற்காகத்தான் மனுவில் அவ்வாறு கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் வாழ்ந்த காலத்தில் எனக்கு அனைத்து பணிவிடைகளையும் செய்துள்ளார் என்றும், இப்பொழுதும் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால் எனக்கு வாழ விருப்பமில்லை. திருமணம் ஆன காலம் முதல் சேர்ந்து வாழ்ந்த காலம் வரை என் மனைவிக்கு செய்ய வேண்டிய எந்த பணிவிடையும் செய்யாமல் கஷ்டப்படுத்தி வந்தேன் என்றால் சரியல்ல. ஆனால் குடும்ப நலன் கருதி என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்பதற்காகவே நான் செய்த அனைத்து செயலையும் பொறுத்து வந்தார் என்றால் சரியல்ல. நான் எவ்வித

நியாயமான காரணமும் இல்லாமல் முன்னறிவிப்பு அனுப்பாமல் நேரடியாக விவாகரத்து மனுவை தாக்கல் செய்திருப்பதிலிருந்தே என்னுடைய உள்நோக்கம் தெரியவருகிறது என்றால் சரியல்ல. என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சம்மத ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதன்படி நான் நடந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளுடன் இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் விவாகரத்து கோரும் அளவிற்கு எந்த மனஉளைச்சலையும எதிர்மனுதாரர் எனக்கு ஏற்படுத்த வில்லை என்றால் சரியல்ல. நான் தான் என் மனைவியை நல்ல முறையில் பராமரிக்காமல் கணவன் என்ற நிலைப்பாட்டில் இருந்து தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் என் மனைவியினுடைய பேங்க் ஆப் பரோடா வங்கி கிரிடிட் கார்டை பயன்படுத்தி அவருடைய அனுமதி இல்லாமல் கடன் பெற்று அந்த கடனை அடைக்காமல் இருந்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் கடன் பெற்றது உண்மை தான் என்றும், அதை வழக்கிற்காக தற்சமயம் மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் நான் மனுவில் கோரியுள்ள விவாகரத்து பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய விவாகரத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.